**அ.வ.எண்: 79/2010** **நாள்: 21.07.2025**

வா.சா.4 - கார்த்திக்கேயன்

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**<u>2 முதல் 6, 8 முதல் 15 ஆகிய பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. தாவா வழக்கு என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் மீனாட்சி அம்மாளுடைய சொத்திற்கு உரிமை கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் என்ன சர்வே எண்கள் தொடர்பாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ஒரே சர்வே எண் தான் 59/6பி ஆகும். மற்ற சர்வே எண்கள் தொடர்பாக எங்களுக்கு பாத்தியம் இல்லை என்றால் சரிதான். தாவா பிராதில் சர்வே எண் 59/6பி-க்கு நான்குமால் காட்டப்பட்டுள்ளதா என்றால் காட்டப்பட்டுள்ளது. (சாட்சியிடம் தாவா பிராது காட்டப்பட்டது) தாவா பிராதில் நான்குமால் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இதில் இல்லை சீர் திருத்தப்பட்ட பிராதில் குறிப்பிடப்பட்டுள்ளது. முதலில் தாக்கல் செய்யப்பட்ட பிராதில் மீனாட்சியம்மாளின் கிரையப்பத்திரம் பற்றி குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

2. மேற்படி கிரையப்பத்திரத்தின் அசல் யாரிடம் உள்ளது என்றால் 5ம் பிரதிவாதி கே.ரா.மணியிடம் உள்ளது. மேற்படி ஆவணம் 5ம் பிரதிவாதியிடம் எவ்வாறு சென்றது என்றால் கூட்டு குடும்பமாக வசித்ததால் அனைத்து அசல் ஆவணங்களும் அங்கு தான் உள்ளது. மேற்படி கிரையப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தாவா சொத்தானது தனித்து பாத்தியப்பட்ட சொத்தாகும். மேற்படி கிரையப்பத்திரத்தின் அசல் 5ம் பிரதிவாதியிடம் உள்ளது குறித்து எனது பிராதிலோ நிருபணவாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை 5ம் பிரதிவாதியிடம் இருந்து திரும்ப பெறுவதற்கு ஏதேனும் நடவடிக்கை எடுத்தோமா என்றால் என் பாட்டியிடம் வாய்மொழியாக கேட்டுக்கொண்டு தான் இருந்தோம். மேற்படி ஆவணத்தை திரும்ப கேட்ட தேதி நினைவில் இல்லை, அது குறித்து எனக்கு நேரடியாக தெரியாது, பாட்டி சொல்லி தான் தெரியும்.

3. மேற்படி 59/6பி தாவா சொத்திற்கு யாரின் பெயரில் வருவாய் துறை ஆவணங்களில் பதிவு ஏற்பட்டுள்ள என்றால் தியாகராஜன் மற்றும் 5 நபர்களின் பெயரில் பதிவு ஏற்பட்டுள்ளது. செட்டில்மெண்ட் காலக்கட்டத்தில் தாவா சொத்திற்கு

யார் பெயரில் வருவாய்த்துறையில் பதிவு ஏற்பட்டுள்ளது என்றால் குப்புசாமி வகையறா பெயரில் பதிவு ஏற்பட்டுள்ளது. அதன் பிறகு தியாகராஜன் வகையறா பெயருக்கு மாற்றப்பட்டது. மேற்படி வருவாய்த்துறை ஆவணத்தில் பெயர் மாறி விவரம் எனது தகப்பனாருக்கு 2010ம் ஆண்டு மே மாதத்தில் தெரிய வந்தது. மீனாட்சியம்மாள் தாவா சொத்தை அனுபவம் செய்தது சம்மந்தமாக எழுத்து பூர்வ ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை 1949ம் ஆண்டில் எழுதப்பட்ட உயில் உள்ளது.

4. மேற்படி உயிலில் தாவா சொத்தின் சர்வே எண் மற்றும் நான்குமால் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான், 1ம் வாதியின் தாயார் மீனாட்சிக்கு தனிப்பட்ட சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி உயில் குறித்து தாவா பிராதில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அசல் பிராதில் குறிப்பிடப்படவில்லை சீர்திருத்தப்பட்ட பிராதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**<u>குறுக்கு விசாரணை:</u>**

2 முதல் 6, 8 முதல் 15 ஆகிய பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.